மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு



# ஆண் பெண் பால்நிலை அடிப்படையில் இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகை தொடர்பான ஆய்வு

# இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகை ஆண் பெண் பால்நிலை அடிப்படையில்)

## அறிமுகம்

ஊழியப் படை அதாவது, பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகை என்பது வேலைவாய்ப்பு தொடர்பிலான ஒரு முக்கிய அளவுகோலாகக் காணப்படுகின்றது. காலத்திற்குக் காலம் சனத்தொகையில் ஏற்படுகின்ற வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை நிலைமைகளைப் போன்றே காலத்திற்கேற்ற வேலைவாய்ப்புகளது இயல்புகளை அறிந்து கொள்வதற்கும் இது பயன்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையினது பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகைஎன்பது 'குறித்த காலப்பகுதியில் பொருளாதார பெறுமதிமிக்க ஒரு பொருள் அல்லது சேவையை உற்பத்தி செய்வதற்காக ஊழியத்தை வழங்குகின்ற சிவில் மற்றும் இராணுவத் துறையில் சேவையாற்றுகின்ற அனைத்து ஆண்களும் பெண்களும் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்காக ஊழியத்தை வழங்க விரும்புகின்ற அனைத்து நபர்களும்' என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. (ருைைவநன யேவழைளெ -1967)

குறித்த வயது என்பதன் மூலம் கருதப்படுவது ஊழியப்டையில் சேர்த்துக் கொள்ளப்படும் வயது மற்றும் அதிலிருந்து வெளியேறவேண்டிய வயது என்பவற்றிற்கிடையிலான இடைவெளியாகும். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச உலக தொழிலாளர் சம்மேளனத்திற்கமைய 15 – 64 வயதிற்கிடைப்பட்ட காலப்பகுதியானது குறிக்கப்பட்ட வயதெல்லையெனக் குறிப்பிடப்படுகின்றது. ஏனினும் இவ்வயதெல்லை நிலையானதன்று. பல்வேறு நாடுகளில் இந்த வயதெல்லைகளில் மாற்றங்களைக் காணலாம்.

உதாரணமாக விவசாய கைத்தொழில் நாடுகளில் சிறுவர்களும் 64 வயதிற்கு மேற்பட்டவர்களும் ஊழிப்படையில் தமது பங்களிப்பைச் செய்கின்றனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் இவ்வயதெல்லையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எனவே சில நாடுகளில் ஆகக் குறைந்த வயதெல்லை 10 ஆகும். அவ்வாறே ஆகக் கூடிய வயதெல்லையாக 70 வயதைக் கொண்ட நாடுகளும் காணப்படுகின்றனர். பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வயதெல்லை குறிப்பிடப்படுவதில்லை.

### 01.பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகை

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினர் தொழில் புரியும் வயதைச் சார்ந்த தரப்பினர் என கருதப்படுகின்றனர். 2018ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையில் மதிப்பிடப்பட்ட தொழில்புரியும் எண்ணிக்கையினர் 16.2 மில்லியனாகக் காணப்படுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. 2017ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது இது 0.3மூ அதிகரிப்பைக் காட்டுகின்றது. வெளிநாடுகளில் இருந்து வருவோர் மற்றும் உள்ளக இடப்பெயர்வுகள் இதற்குக் காரணமாக அமையலாம்.

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியில் தொழில்புரியும் சனத்தொகையினரிடையே வேலைவாய்ப்புள்ள அல்லது வேலையற்ற மொத்த சனத்தொகையானது பொருளாதார

ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகை அதாவது ஊழியப்படையாகும். 2018ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட விதத்தில் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையானது 8.4 மில்லியன்களாகக் காணப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன.

ஊழியப்படையில் உள்ளடக்கப்படுகின்ற நபர்களை தொழில்புரியும் வயதைச் சேர்ந்த சனத்தொகையின் சதவீதமாகக் காட்டும்போது ஊழியப்படையின் பங்களிப்பு விகிதம் (டுகுீசு) எனக் குறிப்பிடப்படுகின்றது. 2018ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்குரிய ஆய்வுப் பெறுபெறுகளுக்கமைய இலங்கையில் மொத்த ஊழியப்படையின் பங்களிப்பானது 51.8மூமாகக் காணப்பட்டது.

ஆய்வுக்கு உட்படத்தப்பட்ட காலப்பகுதியில் ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலமேனும் சம்பளம் பெறுகின்ற ஒரு ஊழியர், ஒரு தொழில்தருனர், தமது வேலையை செய்பவர், தமது குடும்பத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்பவராக ஏதேனும் ஒரு வேலையில் ஈடுபட்டிருக்கும் நபர்,தொழில் புரியும் ஒரு நபராகக் கருதப்படுவார். இக்காலாண்டில் மதிப்பிடப்பட்ட வேலைப்படையானது 8.2மூமாகக் காணப்பட்டது.


ஆய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் வேலையற்ற, ஆய்வுக்கு முன்னரான 4 வார காலப்பகுதியில் தொழில் தேடிக்கொண்டிருந்த, மற்றும் வேலை தேடுவதற்கு ஏதேனும் நடவடிக்கைககளை எடுத்த, அடுத்த 2 வாரங்களில் வேலை கிடைத்தால் அதனைச் செய்ய இயலுமான நபர்களை வேலையற்றோர் எனக் கருதலாம். மொத்த வேலையற்றோர் எண்ணிக்கையை ஊழியப்படையின் சதவீதமாகக் கருதும் போது அது வேலையற்றோர் வீதம் எனக் குறிப்பிடப்படுகின்றது. 2018ஆம் ஆண்டில் மூன்றாம் காலாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வேலையற்றோர் வீதம் 4.1மூமாகக் காணப்பட்டது.

## 02. இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகையின் பரம்பல் - துறைகள் மற்றும் ஆண், பெண் பால்நிலை அடிப்படையில்

| துறை | பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்க சனத்தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | % | ஆண் | % | பெண் | % |
| இலங்கை | 8387701 | 100.0 | 5423477 | 64.7 | 2964224 | 35.3 |
| நகர்ப்புறம் | 1415096 | 100.0 | 966184 | 68.3 | 448912 | 31.7 |
| கிராமப்புறம் | 6559812 | 100.0 | 4215166 | 64.3 | 2344646 | 35.7 |
| பெருந்தோட்டம் | 412794 | 100.0 | 242127 | 58.7 | 170666 | 41.3 |

**அட்டவணை இலக்கம் 01:**

2018ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையில் மதிப்பிடப்பட்ட, பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையானது 8.4மூமாக காணப்பட்டது. அவ்வாறே மேற்கண்ட அட்டவணைக்கமைய இலங்கையின் சனத்தொகையை ஒட்டமொத்தமாக நோக்கும் போது பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையில் 67மூமானோர் ஆண்களாகக் காணப்படுவதுடன், அவர்களுடன் ஒப்பிடும் போது 35.3மூமானோர் பெண்களாகக் காணப்படுகின்றனர். துறைசார் ரீதியிலும் இந்நிலைமையை காணக்கூடியதாக உள்ளது. நகர்ப்புறங்களில் ஆண்கள் 68.3மூமாகவும், பெண்கள் 31.7மூமாகவும், காணப்படுவதுடன் கிராமியத் துறையில் அவர்கள் முறையே 64.3மூ மற்றும் 35.7மூமாகவும் பெருந்தோட்டத்துறையில் 58.7மூ மற்றும் 41.3மூமாகவும் காணப்படுகின்றனர். இங்கு பெருந்தோட்டத் துறையில் ஏனைய துறைகளை விட பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையானது அதிக வீதத்தில் காணப்படுகின்றது.




**வரைபு 01 :**

மேலே காட்டப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் நகர்ப்புறம், கிராமப்புறம், பெருந்தோட்டம் ஆகிய மூன்று துறைகளிலும் பெண்களை விட ஆண்கள் ஊழியப்படையில் அதிக பங்களிப்பைச் செய்வதை காணக்கூடியதாகவுள்ளது.

**03. ஆண் பெண் பால்நிலையின் அடிப்படையில் இலங்கையின் ஊழியப்படையில் பங்களிப்பு வீதம் - வயதுப் பிரிவு அடிப்படையில் (2018 மூன்றாம் காலாண்டு)**

| வயதுப் பிரிவு | மோத்தம் | ஆண் | பேண் |
|---|---|---|---|
| **இலங்கை** | 51.8 | 72.7 | 34.0 |
| **15-19** | 12.1 | 17.1 | 7.2 |
| **20-24** | 53.3 | 72.5 | 36.8 |
| **25-29** | 67.1 | 92.5 | 44.5 |
| **30-34** | 66.7 | 97.0 | 41.9 |
| **35-39** | 67.6 | 96.6 | 45.3 |
| **40-44** | 66.5 | 95.6 | 42.8 |
| **45-49** | 70.4 | 93.9 | 48.3 |
| **50-54** | 67.6 | 94.5 | 49.3 |
| **55-59** | 62.6 | 84.5 | 41.6 |
| **60*** | 29.5 | 45.3 | 16.5 |

***மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்***

**அட்டவணை இலக்கம் 02 :**

பல்வேறு வயதுப் பிரிவினரிடையே ஊழியப்படைக்கான பங்களிப்பு வீதத்தை ஒப்பிட்டு நோக்கும் போது மத்திய வயதுப் பிரிவினர் ஊழியப் படையில் அதிக பங்களிப்பைச் செய்வதை விசேடமாகக் காணக்கூடியதாக உள்ளது. 15 – 19 என்பது குறைந்த வயதுப் பிரிவினராகக் காணப்படுவதுடன் அவர்கள் ஊழியப்படையில் 12.1 என்ற குறைந்த வீதத்தைக் கொண்டுள்ளனர். அத்தோடு 65 வயதிற்கு மேற்பட்ட வயதுப் பிரிவினரும் 29.5மூ அளவான குறைந்த சதவீதத்தைக் காட்டுகின்றனர். இவ்வனைத்து வயதுப் பிரிவினரிடையேயும் ஆண்களது பங்களிப்பு அதிகமாகக் காணப்படுவதுடன், அவர்களுடன் ஒப்பிடும் போது பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

**04.** **ஆண் பெண் பால்நிலை அடிப்படையில் இலங்கையில் ஊழியப்படையின் பங்களிப்பு சதவீதம் - வருடாந்தம்**

| வருடம் | மொத்தம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| **2000** | 50.3 | 67.2 | 33.9 |
| **2005** | 48.3 | 67.1 | 30.9 |
| **2010** | 48.1 | 67.1 | 31.2 |
| **2015** | 53.8 | 74.7 | 35.9 |
| **2017** | 54.1 | 74.5 | 36.6 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை இலக்கம் 03 :**

மேற்கண்ட அட்டவணைக்கமைய ஒவ்வொரு வருடத்துடனும் ஒப்பிடும்போது இலங்கையில் ஊழியப்படையில் பெண்களை விட ஆண்களே அதிகம் பங்களிப்புச் செய்கின்றனர். அவ்வாறே வருடாந்த ஊழியப்படையின் பங்களிப்பு சதவீதத்தை 2000 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் அந்த பங்களிப்பு படிப்படியாகக் குறைந்து பின்னர் 2015ஆம் ஆண்டில் அதிகரிப்பதைக் காணலாம். அவ்வாறே 2017ஆம் ஆண்டில் ஊழியப்படை பங்களிப்பு சதவீதமானது 54.1மூ ஆக உயர்வடைந்துள்ளது.

**05.** **தொழில்வாய்ப்பு, வேலையின்மை, பொருளாதார ரீதியில் செயலூக்கமற்ற சனத்தொகையானது, தொழில்புரியக்கூடிய சனத்தொகையின் சதவீதமாக பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.**

| | **2000** | **2005** | **2010** | **2015** | **2017** |
|---|---|---|---|---|---|
| தொழில்வாய்ப்பு | 46.5 | 44.6 | 45.7 | 51.2 | 51.8 |
| வேலையின்மை | 3.8 | 3.7 | 2.4 | 2.5 | 2.3 |
| பொருளாதார ரீதியில் செயலூக்கமற்ற சனத்தொகை | 49.7 | 51.7 | 51.9 | 46.3 | 45.9 |

*மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்*

**அட்டவணை இலக்கம் 04 :**

மேற்கண்ட அட்டவணைக்கமைய 2000ஆம் ஆண்டில் 46.5மூமாகக் காணப்பட்ட இலங்கையின் வேலைவாய்ப்பு சதவீதமானது 2017ஆம் ஆண்டில் 51.8மூமாக அதிகரித்துள்ளது. வேலையற்றோர் சதவீதமானது 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டில் 2.3மூமாகக் குறைவடைந்துள்ளது. அவ்வாறே பொருளாதார ரீதியில் செயலூக்கமற்ற சனத்தொகையானது 2000ஆம் ஆண்டில் 49.7மூஆகக் காணப்பட்டதுடன் 2005 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் அதிகரித்து 2015ஆம் ஆண்டில் 46.3மூஆகக் குறைவடைந்துள்ளது. அது 2017ஆம் ஆண்டில் 45.9மூஆக மேலும் குறைவடைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

## ஆய்வு

- இந்த ஆய்விற்கமைய இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையில் அதிக பங்களிப்பைச் செய்பவர்கள் ஆண்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது. நகர, கிராமிய, பெருந்தோட்டத் துறைகளிலும் அத்தகைய நிலைமையையே காணக்கூடியதாக உள்ளது. எனினும் ஏனைய துறைகளை விட பெருந்தோட்டத் துறையில் பெண்களது பங்களிப்பு அதிகளவில் காணப்படுகின்றது. பெருந்தோட்டத் துறையில் பெண்கள் அதிகளவில் ஈடுபடுதல் மற்றும் கிராமியத் துறையில் பெண்கள் விவசாய நடவடிக்கைகளிலும், சுயதொழில் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதன் காரணமாக அத்துறைகளில் பெண்களது பங்களிப்பு நகர்ப்புறங்களை விட அதிகளவில் காணப்படுகின்றது.

- ஊழியப்படையின் பங்களிப்பு சதவீதம் தொடர்பில் கவனம் செலுத்தும் போது குறைந்த வயதிலுள்ளவர்களால் பொருளாதாரத்திற்கு குறைவான பங்களிப்பே கிடைக்கின்றது. அவ்வாறே 60 வயதிற்கு மேற்பட்டவர்களதும் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. எனினும் நடுத்தர வயதுப்பிரிவினரே அதிகளவில் பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்கின்றனர். இதன்போது 15 – 19 வயதுக்கிடைப்பட்ட தரப்பினரது ஊழியப்படை பங்களிப்பு குறைவதற்குக் காரணம் அவர்கள் அதிக நேரம் கல்வியில் ஈடுபடுவதாகும். அவ்வாறே 60 வயதிற்கு மேற்பட்டோர் ஓய்வு பெற்ற தரப்பினராக இருப்பதால் அவர்களது பங்களிப்பும் குறைவாகவே காணப்படுகின்றது.

- ஊழியப்படை பங்களிப்பு சதவீதத்தை வருடாந்தம் பகுப்பாய்வு செய்து நோக்கும் போது 2000ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017ஆம் ஆண்டில் அச்சதவீதத்தில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாறே ஆண்களது பொருளாதாரப் பங்களிப்பு அதிகளவில் காணப்படுவதுடன் பெண்களது பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. பெண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடுதல், பிள்ளைகளைப் பராமரித்தல், காரணமாக பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடாமல் இருப்பது இதற்குக் காரணமாக அமையலாம். மேலும் பொருளாதார, சமூக, சமய, கலாச்சார காரணிகளும் இதற்குக் காரமாக அமையலாம். அதாவது அதிக பொருளாதார வளங்களைக் கொண்ட குடும்பங்களிலுள்ள பெண்கள் தொழிலுக்குச் செல்லாமை, கலாச்சார, சமூக காரணிகளால் பெண்கள் தொழிலுக்குச் செல்லாமை, கலாச்சார மற்றும் சமூகக் காரணிகளால் பெண்கள் வேலைக்குச் செல்ல விரும்பாமை என்பன பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்புக் குறைவதற்குக் காரணமாகலாம். அவ்வாறே மாற்றுத் திறனாளிகள் பொருளாதாரப் பங்களிப்புச் செய்யாமையும் ஊழியப்படையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.
- இலங்கையில் வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை தொடர்பான ஆய்வில் ஈடுபடுகையில், தொடர்ச்சியாக பல வருடங்கள் தொழில்வாய்ப்பு வீதமானது அதிகரித்து நேர்மறையான வீதத்தைக் காட்டுவதை அறிய முடிகின்றது. எனினும் 2005ஆம் ஆண்டு மட்டும் 2000ஆம் ஆண்டை விட குறைந்த சதவீதத்தைக்

காட்டிநிற்கின்றது. அதனடிப்படையில் 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரை வேலைவாய்ப்பு வீதமானது தொடர்ச்சியாக அதிகரித்த சதவீதத்தைக் காட்டுகின்றது. எனினும் 2000ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகை மற்றும் செயலூக்கமற்ற சனத்தொகை என்பவற்றுக்கிடையேயான வேறுபாடு 0.6 சதவீதமாகும். 2005, 2010ஆம் ஆண்டுகளில் அது மறை வலுவைக் காட்டுகின்றது. எனினும் 2015 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் 7.4 மற்றும் 8.2 என்ற நேர்மறையான சதவீதத்தைக் காட்டுகின்றது. அதனடிப்படையில் 2000ஆம் அண்ட தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரை பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையில் வளர்ச்சி வீதத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இது பொருளாதார வளர்ச்சிக்கான ஓர் காரணியாகும். இதன்போது வேலைவாய்ப்புகளை அதிகரித்தல், கற்றல் செயற்பாடுகளை அதிகரித்தல், போட்டிமிக்க வாழ்க்கை முறைகளுக்கு மக்களை ஈடுபடுத்துதல் போன்ற விடயங்கள் இதில் தாக்கம் செலுத்தும்.

## முடிபுகளும் பிரேரணைகளும்

- மேற்குறிப்பிட்ட **ஆய்வுகளுக்கமைய**இலங்கையில் பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையை எல்லாத் துறையிலும் வயதுப் பிரிவு அடிப்படையிலும் விளக்கும் போது தெரிய வருவது யாதெனில் ஆண்களது பங்களிப்பு அதிக சதவீதத்தில் காணப்படுகின்றது என்பதாகும்.

- துறைசார் ரீதியில் விளக்கும் போது நகரப்புறத்தில் பெண்களது பங்களிப்பைக் காட்டிலும் பெருந்தோட்டம் மற்றும் கிராமப்புறங்களில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் வறுமை மற்றும் அப்பிரதேசத்திற்குரிய இயல்பு, வாழ்க்கை முறைகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம். நகரப் பிரதேசத்தில் வறுமையில் வாடுகின்ற குடும்பங்கள் காணப்பட்டாலும் பெண்கள் பொருளாதாரத்தை ஈட்டிக் கொள்ளக் கைக்கொள்ளும் வழிமுறைகள் பெரும்பாலும் சட்டவிரோதமானதும் சமூகவிரோதமானதுமான வழிகளாக இருக்கக்கூடும். சில வேளைகளில் அவை பொருளாதார கணக்கெடுப்புகளுக்குள் உள்வாங்கப்படாத சந்தர்ப்பங்களும் உண்டு.

பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகை தொடர்பில் கவனம் செலுத்தும் போது ஆண்களைப் போலவே பெண்களும் அதிக சதவீத பங்களிப்பை வழங்குதல் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக இருப்பதால் அனைத்து துறைகளிலும் இவ்விரு தரப்பினரும் வலுப்படுத்தப்படல் வேண்டும். நகரப் புறங்களில் பெண்களுக்கு பொருளாதார பெறுமதிகளை வழங்கும் பொருட்டு பெண்களை மையமாகக் கொண்ட பயிற்சித் திட்டங்களை நடாத்துதல், தனியார் துறையில் வேலைவாய்ப்புகள் மற்றும் வளர்ந்து வரும் கைத்தொழில் உரிமைகளை அதிகரிப்பதற்கு அரச துறை முனைப்புடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் கிராமிய மட்டத்தில் விவசாயத் துறையை முன்னேற்றுதல் மற்றும் புதிய

உபஉணவுப் பயிர்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான அறிவை வழங்குதல், வீட்டு வேலைகளில் ஈடுபடுவதோடு ஏதேனும் பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்கு அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- ஆண் பெண் பால்நிலை அடிப்படையில் இலங்கையின் ஊழியப்படையில் அவர்களது பங்களிப்பை உற்று நோக்கும் போது 2017ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் ஒரு குறைவைக் காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறே ஊழியப்படையில், ஆண்களை விட பெண்களது பங்களிப்பு வீதம் 50மூ குறைவைக் காட்டுகின்றது. பெண்களை சுயதொழில்களில் ஈடுபடுத்துதல், அதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதற்கான சந்தைகளை ஏற்படுத்திக் கொடுத்தல், உயர் தரத்திலான பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களை அமைத்துக் கொடுத்தல், பெண்களை ஊழியப்படையில் இணைப்பதற்குத் தடையாயுள்ள காலங்கடந்த சட்டதிட்டங்கள் காரணமாக பங்களிப்பு மற்றும் உற்பத்தி மட்டங்கள் குறைவடைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதால் அது தொடர்பில் புதிய சட்டதிட்டங்களைக் கொணர்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அவ்வாறே தனியார் துறையில் பிரசவ விடுமுறை வசதிகள் மற்றும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி வசதிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் தற்காலத்தில் இருக்கின்ற சட்டதிட்டங்கள் மாற்றயமைக்கப்படல் வேண்டும்.

- வயதின் அடிப்படையிலும் பொருளாதாரத்திற்கு வழங்கப்படும் பங்களிப்பில் மாற்றங்கள் ஏற்படுகின்றது என்பதும் இன்னுமொரு முக்கிய விடயமாகும். இங்கு வயது குறைந்த நபர்கள் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் இத்தகைய வயதுப்பிரிவினரின் பங்களிப்புக் குறைவாகக் காணப்படுகின்றது. இத்தகையோரை பொருளாதாரத்தில் பங்களிக்கச் செய்ய வேண்டுமெனின் அவர்களை ஊக்கப்படுத்துவதற்குப் பதிலாக ஊழியச் சந்தையின் கேள்விகளுக்குப் பொருத்தமான வகையில் கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அவ்வாறே 60 வயதிற்கு மேற்பட்ட வயது முதிர்ந்தோர் வீட்டிலிருந்தவாறே வருமான மார்க்கங்களில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான ஊக்கப்படுத்தல்கள் மற்றும் அறிவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நடுத்தர வயதைச் சார்ந்த நபர்களுள் அதிகமானோர் பொருளாதார ரீதியில் செயலூக்கமிக்கவர்களாக இருப்பதோடு அவர்களுள் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுகின்றது. ஆண்களோடு ஒப்பிடுகையில் அரைப்பங்கு குறைவாகக் காணப்படுவதால் அவர்களை ஊக்கப்படுத்துவதற்கு விசேட செயற்றிட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

- தற்போது ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு வீதமானது 95.8%மாகக் காணப்படுவதுடன் அவர்களுள் முறைசாராத மற்றும் சட்ட விரோத பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற நபர்கள் மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடுவோர் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றனர். முறைசாரா மற்றும் சட்டவிரோத தொழில்கள், ஆபத்தான தொழில்களில் ஈடுபடுகின்ற அத்தகைய நபர்களை இனங்கண்டு அவர்களை முறையான, சட்டரீதியான தொழில்களில் ஈடுபடுத்துவதற்கு அரச துறை கவனம் செலுத்துதல் வேண்டும். அவ்வாறே அத்தகைய தரப்பினருக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரங்களை வழங்குவதன் ஊடாக சமூக அங்கீகாரம் மற்றும் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அனைத்து தொழில்களதும் தரத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மிகுந்த பயனுடையதாக அமையும். அவ்வாறே ஆபத்தான தொழில்களில் ஈடபடும் நபர்களுக்கு ஓய்வுதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல், அனைத்து குடிமக்களுக்கும் அதிக வருமானம் மற்றும் உயர் வாழ்க்கை முறைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழலை உருவாக்கிக் கொடுத்தல், பெண்களுக்கு பாதுகாப்பான சேவை நிபந்தனைகளைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் ஊடாக பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ள சனத்தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அதன் ஊடாக இலங்கையானது பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைய முடியும்.